*கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட் வழங்கும் நிலுவையை மாற்றம் செய்யும் திட்டம் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்*

1. *கார்கில்ஸ் வங்கி கடனட்டை வாடிக்கையாளர்கள் தங்களது ஏனைய வங்கிக் கடனட்டைகளிலுள்ள நிலுவைத் தொகையை கார்கில்ஸ் வங்கி கடனட்டைக்கு மாற்றம் செய்து கொள்வதற்கு இடமளிக்கும் வகையில் நிலுவையை மாற்றம் செய்யும் திட்டம் வழங்கப்படுகின்றது.*

2. *நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்திற்கு விண்ணப்பிக்கின்ற கடனட்டை வாடிக்கையாளர் அதற்கான விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து, குறிப்பிட்ட திட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அட்டை மையத்தில் அதனை ஒப்படைத்தல் வேண்டும்.*

3. *நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்திற்கான விண்ணப்பமானது, அவ்வாறு விண்ணப்பிக்கும் சமயத்தில் கடனட்டையில் கிடைக்கப்பெறும் மீதித் தொகை மற்றும் வங்கியின் அங்கீகாரத்திற்கு அமைவாகவே ஏற்றுக்கொள்ளப்படும்.*

4. *கடனட்டை வாடிக்கையாளர் முன்வைத்த நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்திற்கான விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டால், நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் உரிய கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையை வங்கி மேற்கொள்வதற்கு கடனட்டை வாடிக்கையாளர் வழங்கும் எழுத்து மூலமாக அனுமதியாக முறையாக கையொப்பமிட்டு கையளித்த விண்ணப்பப்படிவம் கருத்தில் கொள்ளப்படும்.*

5. *கடனட்டை வாடிக்கையாளர் முன்வைத்த நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்திற்கான விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டால், நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் உரிய கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையை வங்கி மேற்கொள்வதற்கு கடனட்டை வாடிக்கையாளர் முறையாக கையொப்பமிட்டு கையளித்த விண்ணப்பப்படிவம் மற்றும் வங்கியின் முகவருக்கும் கடனட்டை வாடிக்கையாளருக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் ஆகியன கடனட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு வழங்கியுள்ள அனுமதியாக கருதப்படும்.*

6. *நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் தொகையானது கடனட்டை வாடிக்கையாளரின் கடன் எல்லைக்கு அமைவாக போதுமானதாக இல்லாவிட்டால், பொருத்தமானது எனது வங்கி கருதும் தொகையே நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்துள்ள தொகையில் பகுதியளவாக அங்கீகரிக்கப்படுவதுடன், இது முற்றுமுழுதாக வங்கியின் தீர்மானத்திற்கு அமைவானது.*

7. *இலங்கை மத்திய வங்கியின் உரிய விதிமுறைகளுக்கு அமைவாக கார்கில்ஸ் வங்கி மற்றும் ஏனைய வங்கிகளால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவு முறைமையினூடாக நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தொகையானது ஏனைய வங்கியின் கடனட்டைக் கணக்கிற்கு கார்கில்ஸ் வங்கியால் அனுப்பி வைக்கப்படும்.*

8. *நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட மொத்த தொகையையும் நேரடியாக ஒரே தொகையாக தனது கடனட்டைக் கணக்கில் பற்றுச் செய்து அல்லது தவணைக்கொடுப்பனவுத் திட்டமாக மாற்றிக்கொண்டு, நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட மொத்த தொகையையும் மீளச் செலுத்தும் தெரிவை கடனட்டை வாடிக்கையாளர் தீர்மானிக்க முடியும்.*

9. *நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட மொத்த தொகையையும் தவணைக்கொடுப்பனவுத் திட்டமாக மாற்றிக்கொண்டுஇ மீளச் செலுத்தும் தெரிவை கடனட்டை வாடிக்கையாளர் தீர்மானிக்கும் பட்சத்தில் பின்வரும் மேலதிக நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக அது அமையப்பெறும்:*

*அ. நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட மொத்த தொகையையும் 6, 12, 18, 24, 36 மாத காலங்களுக்கு மீளச் செலுத்தும் தெரிவை கடனட்டை வாடிக்கையாளர் கொண்டுள்ளார். புதுப்பிக்கப்பட்ட வட்டி வீதங்களை அறிந்து கொள்வதற்கு தயவு செய்து கார்கில்ஸ் வங்கியின் இணையத்தளத்தை* (www.cargillsbank.com) *பார்வையிடவும்.*

*ஆ. நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட மொத்த தொகையையும் சம தொகை கொண்ட மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளாக (முதல் தொகையின் பகுதியளவு மற்றும் வட்டி) செலுத்தப்படல் வேண்டும். வாடிக்கையாளர் தெரிவு செய்த காலப்பகுதிக்கு அமைவாக நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட மொத்த தொகையும், வட்டியும் பிரிக்கப்பட்டு, நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட மொத்த தொகைக்கான மீள்கொடுப்பனவுத்*

தொகை தீர்மானிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட காலப்பகுதியில் இது நிலையான கொடுப்பனவுத் தொகையாக கருதப்படும்.

இ. நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட மொத்த தொகைக்கான மீள்கொடுப்பனவுத் தொகையானது மாதாந்த அடிப்படையில் கடனட்டைக் கணக்கில் பற்றுச் செய்யப்பட்டு, கடனட்டை மீது விதிக்கப்படும் வழக்கமான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையாக கடனட்டைக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும்.

ஈ. வங்கியால் கடனட்டை வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட கடனட்டையில் நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட மொத்த தொகையும் முடக்கப்படுவதுடன், ஒவ்வொரு தவணைக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்படுகின்ற போது படிப்படியாக குறைக்கப்படும்.

உ. நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்திற்கான விண்ணப்பப் படிவத்தில் அட்டை வாடிக்கையாளர் கைச்சாத்திடும் தினத்தில் அல்லது வங்கியின் தீர்மானத்திற்கு அமைவாக பிறிதொரு தினத்தில் முதலாவது தவணைக் கொடுப்பனவுத் தொகையானது கடனட்டைக் கணக்கில் பற்றுச் செய்யப்படும் என்பதை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

ஊ. கடனட்டை கணக்குக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்தப்பட வேண்டிய திகதியில் உரிய மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளை அட்டை வாடிக்கையாளர் செலுத்த வேண்டும் என்பதுடன், காலத்திற்கு காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்றவாறு கடனட்டைகளுக்கு விதிக்கப்படுகின்ற வழக்கமான வட்டி வீதத்தின் பிரகாரம், செலுத்த வேண்டிய திகதியில் செலுத்தப்படாது எஞ்சியுள்ள நிலுவைத் தொகைக்கு வட்டி அறவிடப்படும்.

எ. குறிப்பிட்ட மாதமொன்றில் வங்கியின் கடனட்டையில் நிலுவையாக உள்ள தொகையை விட மேலதிக தொகை செலுத்தப்பட்டால், குறிப்பிட்ட மேலதிக தொகையானது நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் இன்னமும் பட்டியலில் சேர்க்கப்படாமல் உள்ள தவணைக் கொடுப்பனவுத் தொகையிலிருந்து தானாகவே கழிக்கப்பட மாட்டாது.

ஏ. நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் தவணைக் கொடுப்பனவுத் திட்டம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தவறுகின்ற/நிறைவேற்றாத/செலுத்தாமை காரணமாக கடன் எல்லை மீறப்பட்டு, அட்டை வாடிக்கையாளரின் கடனட்டையானது இரத்துச் செய்யப்பட்டால்/நிறுத்தப்பட்டால்/முடக்கப்பட்டால்/புதுப்பிக்கப்படாது விட்டால், நிலுவையாகவுள்ள மொத்த தவணைக் கொடுப்பனவுத் தொகையும் அட்டை வாடிக்கையாளரால் உடனடியாக செலுத்தப்படல் வேண்டும்.

ஐ. குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே முழுத்தொகையையும் செலுத்த அட்டை வாடிக்கையாளர் திட்டமிட்டால், வங்கிக்கு அவர் முற்கூட்டியே அது தொடர்பில் எழுத்து மூலமாக அறியத்தர வேண்டும் என்பதுடன், அவ்வாறு முழுத்தொகையையும் முற்கூட்டியே செலுத்தும் போது நிலுவையாக உள்ள மொத்த முதல் தொகை மற்றும் குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு மொத்த வட்டித் தொகை ஆகிய இரண்டையும் ஒட்டுமொத்தமாக செலுத்துதல் வேண்டும்.

ஒ. மீள்கொடுப்பனவு தொடர்பில் தீர்மானிக்கும் காலப்பகுதியில் பின்னர் எவ்விதமான மாற்றங்களையும் மேற்கொள்ள முடியாது என்பதுடன், நிதியை வைப்புச் செய்வதற்கு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையின் முழுத்தொகையும் வங்கிக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படல் வேண்டும்.

10. தேவையான சமயங்களில் வங்கி தனது தற்துணிபின் தீர்மானங்களுக்கு அமைவாக காலத்திற்கு காலம் சேவைக்கட்டணங்களை/கட்டணங்களை/வரிகளை விதிக்கும் பூரண உரிமையைக் கொண்டுள்ளது.

11. நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் ஏனைய வங்கிகளில் மூன்றாம் தரப்பினர் கொண்டுள்ள கடனட்டைகளுக்கு இதனை மேற்கொள்ள முடியாது.

12. நிலுவையாக உள்ள தொகையை அறவீடு செய்வதற்கு வங்கியானது மூன்றாம் தரப்பு அறவீட்டு முகவர்களை நியமிக்கும் என்பதை வாடிக்கையாளர் இத்தால் ஏற்றுக்கொண்டு அதற்கு அனுமதியளிக்கின்றார். அறவீட்டு முகவருக்கு இந்த பணியை ஒப்படைக்க வேண்டி ஏற்பட்டால் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டால், அனைத்துச் செலவுகள், வட்டித் தொகைகள், சட்டச் செலவுகள் மற்றும் அறவீட்டு முகவரின் கட்டணங்கள் அனைத்தையும் அட்டை வாடிக்கையாளரே செலுத்த வேண்டும்.

13. அட்டை வாடிக்கையாளர் கொண்டுள்ள ஏனைய வங்கிக் கடனட்டைகளுக்கான கொடுப்பனவுகளை செலுத்த வேண்டிய திகதியில் செலுத்துவதற்கு வங்கி தவறினால் அல்லது தாமதித்தால் அல்லது அட்டை வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக வங்கி செயற்படும் போது, அவ்வாறான தாமதமான கொடுப்பனவுகளால் அட்டை வாடிக்கையாளருக்கு ஏற்படக்கூடிய செலுத்த வேண்டிய

தொகையை செலுத்தாது விட்டமைக்கான தண்டப் பணம், தாமதமாக செலுத்தியமைக்கான தண்டப்பணம், நிதிக் கட்டணங்கள் அல்லது வேறு எந்தவொரு அறவீடுகள்/பொறுப்புக்கள் காரணமாக வட்டி காரணமாக அல்லது வேறு எந்தவொரு விதத்திலும் அட்டை வாடிக்கையாளருக்கு ஏற்படக்கூடிய எவ்விதமான இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பேற்றுக்கொள்ள மாட்டாது என்பதுடன் அதற்கான இழப்பீட்டை வங்கியிடம் கோர முடியாது.

14. நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ் அதனுடன் இணைந்த அம்சங்கள் மற்றும் சேவைகளை வங்கியே தீர்மானிக்கும் என்பதுடன், பொருத்தமானது என வங்கியால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நிலுவையை மாற்றம் செய்யும் திட்டம் தொடர்பான அம்சங்கள், சேவைகள் மற்றும் நிபந்தனைகளை காலத்திற்கு காலம் மாற்றம் செய்யும், மீளப்பெறும், மாறுபடுத்தும் அல்லது திருத்தம் செய்யும் பூரண உரிமையை வங்கி கொண்டுள்ளது.

15. நிலுவையை மாற்றம் செய்யும் திட்டத்திற்கு கடனட்டை வாடிக்கையாளர் தொடர்பான பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் விதிக்கப்படுவதுடன், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் கடனட்டை வாடிக்கையாளர் தொடர்பான பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுக்கு இடையில் ஏதாவது முரண்பாடுகள் காணப்படுகின்ற பட்சத்தில், நிலுவையை மாற்றம் செய்யும் திட்டம் தொடர்பான விடயங்களுக்கு மாத்திரம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

16. நிலுவையை மாற்றம் செய்யும் திட்டம் தொடர்பாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கடனட்டை வாடிக்கையாளர் தொடர்பான பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக அமைந்துள்ளதுடன், எவ்விதமான விதிவிலக்குகளுக்கும் உட்படாது.

17. தொடர்பாடல்கள் அனைத்தும் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்: கார்கில்ஸ் வங்கி அட்டை மையம், இல 34, மெயிட்லான்ட் கிறெசென்ட், கொழும்பு 07 அல்லது மின்னஞ்சல்: cards@cargillsbank.com.